**சார்பு நீதிமன்றம், திருவாரூர்**

**முன்னிலை : திரு. M. முருகன், M.L.,**

**சார்பு நீதிபதி, திருவாரூர்**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01–ஆம் நாள், புதன் கிழமை

(திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனித்திங்கள் 18–ஆம் நாள்)

**மேல்முறையீடு வழக்கு எண் : 30 / 2019**

**CNR No : TNTV03-000436-2019**

1.கலைஞர்
2.மேகலா ... **மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள்**

**/ எதிர் /**

காயத்ரி ... **எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி**

**விசாரணை நீதிமன்றத்தின் தரப்பினர்கள் விபரம் :**

காயத்ரி ... **வாதி**

**/ எதிர் /**

1. கலைஞர்
2. மேகலா ... **பிரதிவாதிகள்**

**மேல்முறையீட்டு வழக்கு பொருமான விபரம்**

| | | |
|---|---|---|
| வழக்கின் தன்மை | : | சொத்து வசம் கேட்டல் |
| சட்டப்பிரிவு | : | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணச்சட்டம் பிரிவு 52 r/w 30 |
| வழக்கின் மதிப்பு | : | ரூ.51000/- |
| நீதிமன்ற கட்டணம் | : | ரூ.1530/- |
| வழக்குசொத்தின் சந்தை மதிப்பு வழக்கு பொறுமான விபரம் | : | -- |

/உத்தரவுப்படி/

சிரஸ்தார்

**சார்பு நீதிமன்றம், திருவாரூர்**

**முன்னிலை : திரு. M. முருகன், M.L.,**

**சார்பு நீதிபதி, திருவாரூர்**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01–ஆம் நாள், புதன் கிழமை

(திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனித்திங்கள் 18–ஆம் நாள்)

**மேல்முறையீடு வழக்கு எண் : 30 / 2019**

**CNR No : TNTV03-000436-2019**

1. திருவாரூர் மாவட்டம், நன்னிலம் டி.மு.இலாக்கா, தாலுக்கா, மேனாங்குடி அஞ்சல் மற்றும் கிராமத்தில், பஜனைமடத்தெருவில் வசிக்கும் முருகையன் குமாரர், இந்து, சுமார் 35 வயதுள்ள கலைஞர்.
2. மேற்படி முகவரியில் வசிக்கும் கலைஞர் மனைவி சுமார் 30 வயதுள்ள மேகலா.

... மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள்

. //எதிர் //

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் டி.மு.இலாக்கா, தாலுக்கா, மேனாங்குடி அஞ்சல் மற்றும் கிராமத்தில், மேலத்தெருவில் வசிக்கும் மணிவண்ணன் மனைவி, இந்து, 25 வயதுள்ள காயத்ரி.

...எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி

இந்த மேல்முறையீட்டு வழக்கானது 29.03.2019–ம் தேதியன்று, அ.வ.எண்.7/2013–ல் நன்னிலம், மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

----------

**விசாரணை நீதிமன்றத்தின் தரப்பினர்கள் விபரம் :**

காயத்ரி ... **வாதி**

**/ எதிர் /**

1. கலைஞர்
2. மேகலா ... **பிரதிவாதிகள்**

இந்த மேல்முறையீடு நன்னிலம், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் 29.03.2019 அன்று அசல் வழக்கு

எண்.7/2013–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை.41, விதி.1 மற்றும் 2, உ/இ பிரிவு.96–ன் கீழ் மேல்முறையீட்டாளர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மேல்முறையீடு தாக்கலான நாள் 17.06.2019, 25.06.2019
இம்மேல்முறையீடு கோப்பில் எடுக்கப்பட்ட நாள் 26.06.2019
மேல்முறையீட்டின் மதிப்பு ரூ.51000/–

மேல்முறையீட்டாளரால் கீழமை நீதிமன்றத்தில் செலுத்தப்பட்ட நீதிமன்றக் கட்டணச்சட்டம் பிரிவு 52 r/w 30–ன் படி நீதிமன்ற கட்டணமாக ரூ.1530/– மேல்முறையீட்டாளரால் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த மேல்முறையீடு வழக்கு கடந்த 03.03.2026–ம் தேதி இறுதியாக என் முன்பாக விசாரணைக்காக வந்தபோது, 1, 2 மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.S.R.அய்யப்பன்** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.M.பாரி** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற சீரான ஆய்வில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பகரும்..

## தீர்ப்பாணை

1. இந்த மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. அசல் வழக்கு எண்.7/2013 அசல் வழக்கு எண்.123/2012–ல் விசாரணை நீதிமன்றம் கடந்த 29.3.2019 அன்று பிறப்பித்த தீர்ப்பை உறுதி செய்து இரண்டு மேல்முறையீடுகளான மேல்முறையீட்டு எண்.30/19, 31/19–ஐ செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பாணை வழங்குகிறது.

## செலவுத்தொகை பட்டியல் விபரம்

| வ. எண். | மேல்முறையீட்டாளர் தரப்பு | Rs. P. | எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு |
|---|---|---|---|
| 1. | வக்காலத்து | 10.00 | செலவுத்தொகைப்பட்டியல் தாக்கல் இல்லை. |
| 2. | மேல்முறையீட்டிற்கான நீ.ம.க. | 75.50 | |

| | | | |
|---|---|---|---|
| 3. | படி செலவு | 4.50 | |
| 5. | வழக்கறிஞர் ஊதியம் | 2000.00 | |
| 6. | **மொத்தம்** | **2090.00** | |
| 7. | **முழுமையாக்கப்பட்ட தொகை** | **2090.00** | |

**சொத்து விவரம்(வழக்குரையில் உள்ளபடி)**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், பேரளம் துணைப்பதிவு வட்டத்தினை சேர்ந்த நன்னிலம் வட்டம், நன்னிலம் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட மேனாங்குடி வருவாய் கிராமம் மேனாங்குடி கிராமத்தில் வடக்குத்தெருவில் பழைய புல எண்.184/19 புதிய புல எண்.274/14 நத்தம் மனை 134 சதுர மீட்டர் காலிமனை.

(மேன்கூறை பிரிபட்டு கீழ்நிலம் வசம் கிடைக்க வேண்டியுள்ளது)

நான்கெல்லை:– வடக்கில் நூலாறு, தெற்கில் ரோடு, மேற்கில் ராணி என்கிற செல்வராணி வீடு, கிழக்கில் ஜெயமணி வீடு.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01–ஆம் நாளில் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு வழங்கப்பட்டது.

MURUGAN M Digitally signed by MURUGAN M Date: 2026.04.20 12:11:29 +0530

சார்பு நீதிபதி,
திருவாரூர்.

**நகல் :**
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
நன்னிலம்.

Decree
AS.No.30/2019
Dated: 01.04.2026